# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 92/மா/2023**
**நாள் : 13.05.2023**

திரு. G.M. சங்கர்,
மடிப்பாக்கம், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

The Education Officer,
Greater Chennai Corporation,
Rippon Building, Chennai – 600 003. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் என்பவரின் 08.02.2023 நாளிட்ட மனு 09.02.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 92/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் தனது முறையீட்டு மனுவில்,

> "சென்னை பெருநகர மாநகராட்சி மடிப்பாக்கத்தில் 188வது வார்டுக்குட்பட்ட பகுதியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் மயிலை பாலாஜி நகரில் உள்ள நடுநிலைப்பள்ளிகள் இன்றைய நாளதுவரை மாநகராட்சிப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படாமல் உள்ளது. மேலும் இதே போன்று சென்னை பெருநகர மாநகராட்சியின் மண்டலம்-14 மற்றும் 15-ல் உள்ள அனைத்து வார்டுகள் கடந்த 2011ம் வருடமே மாநகராட்சியின் எல்லைக்குள் கொண்டுவரப்பட்டது. அதனடிப்படையில் மண்டலம்-14 மற்றும் மண்டலம் -15 ஆகியவற்றிற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவை சென்னை பெருமாநகராட்சி பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இதுரை அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து சென்னை மாநகராட்சி கல்வி அலுவலருக்கு ஏற்கனவே 20.03.2022 அன்று கடிதம்

அனுப்பப்பட்டு இதுநாள்வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆகையால், அடிப்படை உரிமையான கல்வியை அரசுப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தரமாகவும், பாரபட்சமின்றி வழங்கிடவும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சென்னை பெருமாநகராட்சியின் மண்டலம்-14 மற்றும் மண்டலம்-15ல் உள்ள அரசு தொடக்கப்பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றை சென்னை பெருமாநகராட்சி பள்ளிகளாக தரம் உயர்த்த நடவடிக்கைகள் எடுக்காத சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கவேண்டி ஆம் அத்மி கட்சி தமிழ்நாடு மாநில வழக்கறிஞர் அணி சார்பாக தங்களை மிகவும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வி அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 02.05.2023 நாளிட்ட அறிக்கையில்**:-

மனுதாரர் மனு குறித்து தெரிவிப்பது யாதெனில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இரு பள்ளிகள் உட்பட 139 பள்ளிகளை பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை நிர்வாகத்திடம் பள்ளி கல்வித்துறையால் அரசாணை எண்.48 நாள்:01.03.2023ன்படி இணைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், ஆணை எண்.48, நாள்:01.03.2023ன்படி மண்டலம் 14ல், 5 ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளிகளும் 3 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் மண்டலம் -15ல், 10 ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளிகளும், 5 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளும் மொத்தம் 15 பள்ளிகள் தற்பொழுது பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலை பள்ளிகள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்படாமல், அப்பள்ளிகள், பள்ளி கல்வித்துதுறையால் நிர்வகிக்கப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 03.05.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 03.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி மடிப்பாக்கம் வார்டு எண் 187 மற்றும் 188க்கு உட்பட்ட பகுதியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் தற்போதுவரை

மாநகராட்சிப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படாமல் உள்ளது. மேற்கண்ட பள்ளிகளை பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளாக தரம் உயர்த்துவது குறித்து சென்னை மாநகராட்சி அலுவலருக்கு மனுக்கள் அனுப்பியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட எங்கள் பகுதியில் உள்ள மாணவர்கள் பாரபட்சமின்றி கல்வியைக் கற்றிட மண்டலம் 14 மற்றும் 15ல் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை சென்னை பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளாக தரம் உயர்த்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 14 (ம) 15-ன் உதவி கல்வி அலுவலர் 03.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம் வார்டு எண் 188க்கு உட்பட்ட பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் மயிலை பாலாஜி நகரில் உள்ள நடுநிலைப்பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகள் அரசாணை எண் 48 கல்வித் துறை நாள் 1.3.2023ன்படி இணைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் மேலும் மேற்கண்ட அரசாணையின்படி மண்டலம் 14ல் உள்ள 5 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளும், 3 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளும் மேலும் மண்டலம் 15-ல் உள்ள 10 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளும், 5 ஊராட்சி ஒன்றியப் நடுநிலைப் பள்ளிகளும், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து அதற்கான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 (ம) 15-ன் உதவி கல்வி அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் திரு. G.M. சங்கர் பெருநகர சென்னை மாநகராட்சி மடிப்பாக்கத்தில் 188வது வார்டுக்குட்பட்ட பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் தரம் உயர்த்தப்படாமல் உள்ளது என்றும், அப்பள்ளிகளை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கும்படியும் இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின் கல்வி அலுவலர் (பொ) மற்றும் உதவி கல்வி அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள இரு பள்ளிகள் உட்பட 139 பள்ளிகளை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் மண்டலம் 14ல் உள்ள 5 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளும் 3 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளும் மண்டலம் 15ல் 10 ஊராட்சி

ஒன்றிய தொடக்கப்பள்ளிகளும், 5 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளும் மொத்தம் 15 பள்ளிகள் அரசாணை எண்.48 பள்ளிக் கல்வித் (பக5(2) துறை 1.3.2023ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளன என தெரிவித்து, அதற்கான அரசாணை மற்றும் ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கல்வி அலுவலரின் (பொ) அறிக்கை மற்றும் உதவி கல்வி அலுவலரின் வாக்குமூலத்தை ஏற்று இம்மனு மீது மேல்நடவடிக்கை தொடர அவசியம் எழவில்லையென முடிவு செய்து, இம்முறைமன்றம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. G.M. சங்கர்,
எண்.57B, லஷ்மி நகர் பிரதான சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.
2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.
3) கல்வி அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி (கல்வி)
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4) கண்காணிப்புப் பொறியாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
5) கண்காணிப்பு பொறியாளர் / மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
சென்னை–600 032